1974 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கீழ்த்திசைக் கல்லூரிகளை, இரண்டாம் நிலை கலைக் கல்லூரிகளாகக் கருதும் பொருள் அரசின் பரிசீலனை யில் இல்லை. தவிர, இது பல்கலைக் கழகங்கள் முடிவு செய்ய வேண்டிய ஒரு பொருள்.

Costly Hospital Equipments in Government Hospitals

* 217 Q.—THIRU SAW GANESAN (on beholf of THIRU G. SWAMINATHAN). Will the Hon. the Minister for Health eb pleased to state—

(a) the names of Government Hospitals in the State where the costly hospital equipments such as Electro-Cardiogram, Electro-Encephalogram and X-Ray equipment are under repair as on 1st November 1970;

(b) the period for which they are under repair; and

(c) the alternative arrangements made when the above equipments were under repair?

அரசு மருத்துவமனைகளிலுள்ள விலையுயர்ந்த மருத்துவமனைக் கருவிகள்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—11—1970 அன்றுள்ளபடி, இம்மாநிலத்தில் எந்தெந்த அரசு மருத்துவமனைகளிலுள்ள நெஞ்சுத்துடிப்பைப் பதிவு செய்யும் மின்னியற் (Electro-cardiogram), மூளை வீக்கத்தைப் பதிவு செய்யும் மின்னியற் கருவி (Electro-Encephalogram) எக்ஸ் கதிர்கள் கருவி ஆகிய விலையுயர்ந்த மருத்துவமனைக் கருவிகள் பழுது பார்த்து வரப் படுகின்றன?

(இ) எவ்வளவு காலமாக அவை பழுது பார்த்து வரப்படுகின்றன?

(உ) மேற்சொன்ன கருவிகளைப் பழுது பார்க்கையில், செய்யப்பட்ட மாற்று ஏற்பாடுகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) (இ) & (உ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 76-81 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பிற்பகல் 4–10]

THIRU A. R. DAMODARAN : Sir, this complaint continues. May I know whether the Government have created any special technical wing in the Medical Department itself to look after these repair works, as a number of Hospitals have such defective equipments?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மிக நுண்ணிய நுண்மின் கருவிகள் பலவற்றை அண்மைக் காலத்திலே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக, அவைகளை மூன்று வகைகளிலே பழுது பார்க்க வழி செய்யப்படுகிறது. ஒன்று, தொழில் வாணிபத் துறை இயக்குநர் அலுவலகத்திலே இதற்காக அமைக்கப்பட்டுள்ள நுண் தொழில் நுட்ப விஞைர்கள் அல்லது இப்படிப்பட்ட பழுது பார்க்கக்கூடிய திறமை உள்ளவர்கள் பயன்படுத்தப்படுகிருர்கள். அதற்கு மேற்பட்டு, மத்திய அரசினுடைய சார்பில், இதே வகையான சிறப்புப் பணியாற்றக்கூடிய நவீன கருவிகளைச் செப்பனிடக்கூடிய ஒரு அலுவலர் குழு இருக்கிறது. அவர்கள் அழைக்கப்படுகிருர்கள். அவர்களாலும் பழுது பார்க்க முடியாத நிலை ஏற்படுமானல், அந்தக் கருவிகளை விற்பனை செய்யும் நிறுவனத்தாரே திரும்ப அழைக்கப்படுகிருர்கள். இப்படி முயற்சிக்கப்படுகிறது. ஆனல் பல கருவிகள் ஏற்கெனவே 30 ஆண்டுகளுக்கு முன்னர், 15 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டு, அவற்றை உற்பத்தி செய்தவர்கள் அந்த 'மாடல்'—அமைப்பு முறைகளை மாற்றி விட்டதன் காரணமாக, அதற்குப் பொருத்தப்பட வேண்டிய கருவிகள் அவ்வப்போது கிடைக்காததன் காரணமாக, சிரமம் ஏற்படுகிறது. ஆனல் மொத்தமாக அதற்காகப் பொருத்தக்கூடிய மாற்றுக் கருவிகள், பகுதிகள் கிடைக்கக்கூடிய காலம்வரையில் அந்த இயந்திரங்களையே பயன்படுத்த வேண்டிய நிலையிலேதான் பொருளாதாரச் சூழ்நிலை இருக்கிறது. இவையெல்லாம் பயன்படவில்லையென்று ஒதுக்கிவிட முடியவில்லை. நோயாளிகளைக் குடும்பத்தில் வைத்துக்கொண்டு, அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருப்பதுபோல, இந்தக் கருவிகளை அடியோடு விடவும் முடியவில்லை; உடனடியாகப் பழுது பார்க்கவும் முடியவில்லை. பழுது பார்க்கக்கூடிய திறமை உள்ளவர்களை அலுவலில் அமர்த்தவும் வாய்ப்பில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், 4-வது இனமாக இருக்கும் திருப்பத்தூர் மருத்துவ மனையில், எக்ஸ்ரே பிளாண்ட் கிட்டத்தட்ட 3¾ ஆண்டுகள் வரை பழுது பார்க்கப் படாமல் இருந்ததன் காரணமென்ன? 2—4—69 முதல் 18—12—72 வரையில் பழுது பார்க்கப்படாமல் இருந்திருக்கிறது. அவ்வளவு காலம் வரை

1974 மார்ச் 26]

யில் பழுது பார்ப்பதற்கான ஆள் கிடைக்கவில்லையா? அல்லது அதற்கான சாதனங்கள் கிடைக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். அம்மாதிரி 3, 4 ஆண்டுகள்வரை எக்ஸ்ரே பிளான்ட் ஒரு மருத்துவ மனையில் பழுது பார்க்கப்படாமல் இருந்ததென்பதை அரசாங்கம் எப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்பொழுது ஒரு கம்பெனியிலே வாங்கப்பட்ட அந்த எக்ஸ்ரே பிளான்ட் முதலானவை பழுது பார்க்கப்படுவதற்கு உடனே அந்த கம்பெனிக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்களே கவனிக்க வேண்டும் என்ற ஒரு முறை இருந்தது. அவர்களுக்கு நாம் தெரிவித்தும், அவர்கள் கவனிக்கவில்லை. அதன் காரணமாக அவர்களிடத்திலேயிருந்து எக்ஸ்ரே கருவிகள் வாங்குவதைக்கூட நிறுத்திவிடுவது என்று தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு, அண்மைக் காலத்திலே ஒன்றரையாண்டு காலமாக ஓரளவு அவர்கள் தங்கள் கடமையைச் செய்கின்றார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, while appreciating the fact that the Hon. the Health Minister has to look after sick patients as well as sick machines, may I know whether any approach has been made to the I.I.T., Madras, where technically qualified personnel are available for the repair of such equipments?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டிருக்கிற ஒரு விடையில் கிண்டியில் உள்ள மத்திய குழு குறைந்த அளவு தொழில் நுட்ப வல்லுனர்களைக் கொண்டு 1967-ல்தான் தொடங்கப்பட்டது என்றும், அந்த மத்திய குழு தங்களுடைய தொழில் நுட்ப வினைஞர்களை மேலும் திறன் உடையவர்களாக ஆக்க பயிற்சி அளித்து அவர்களுடைய தகுதியையும் திறமையையும் உயர்த்துவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். கிண்டியிலேதான் ஐ.ஐ.டி. இருக்கிற காரணத்தாலே அது சம்பந்தப்பட்டதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, நவீன முறையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற எக்ஸ்ரே மெஷினரி மேலை நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டிருந்தால், அவற்றுக்கு ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அந்தக் கோளாறை நிவர்த்தி செய்வதற்கு மேலை நாட்டிலேயிருந்து அந்த நிபுணர்தானே வர வேண்டியிருக்கிறது. அப்படித் தேவைப்படுமானால், அப்படி மேலைநாட்டிலேயிருந்தே நிபுணர்களை வரவழைக்க சர்க்கார் அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி ஒரு முறையை நடைமுறைப்படுத்துவது இயலாத காரியம். ஒரு இயந்திரத்தினுடைய விலையைவிட அவர்கள் வந்துபோகிற செலவு அதிகமாகும். இங்கேயே அதிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இணைப்புக் கருவிகள், மாற்றுக் கருவிகள் உடனடியாகக் கிடைப்பதிலே சில நேரத்திலே தடை ஏற்படுகிறது. காரணம் மேல்நாட்டாரின் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஐந்து ஆண்டுகளுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 'model of the machines' மாறிக்கொண்டே இருக்கிறது. ஆகவே அதிலே பொருத்தப்படவேண்டிய 'ஸ்பேர் பார்ட்ஸ்' எளிதாகக் கிடைப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், சில நேரங்களிலே பழுது பார்த்ததற்குப் பின்னால், மறுபடியும், தாங்கும் சக்தி குறைவு காரணமாக, அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாகப் பழுதுபட்டுவிடுகிறது. இந்தச் சிக்கல் இனி விரைவில் நுட்ப அறிவு வளர்ச்சி காரணமாக தீர்க்கப்படும் என்று எதிர் பார்க்கிறேன்.

Motor Car Accident Cases

* 218 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that in some districts, especially in Madurai district, motor car accident cases are pending for more than four years; and

(*b*) if so, whether there is any proposal to set up a separate Motor Car Accident Claims Tribunal at Madurai to dispose of the cases expeditiously?

மோட்டார் வாகன விபத்து வழக்குகள்.

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மோட்டார் கார் விபத்து வழக்குகள் சில மாவட்டங்களில், குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக முடிவு செய்யப்படாமலுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இந்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கு மதுரையில், மோட்டார் கார் விபத்து இழப்பீட்டு உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றம் ஒன்றைத் தனியே அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?